**செய்தி வெளியீடு எண்: 273** **நாள் : 08.06.2016**

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்

<u>தொழில் முனைவோர்களுக்கான மாதாந்திர இணைப்புக் கூட்டம்</u>

தமிழக அரசின் நிறுவனமான தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (www.editn.in) சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் 2013–14 ஆம் ஆண்டில் முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) அறிவித்தார். இத்திட்டத்தில் இதுவரை தமிழ்நாட்டில் 2606 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

புதிய தொழில் முனைவோருக்கு ஆரம்பக்கட்டத்தில் ஆலோசனை உதவிகளும் வழிகாட்டுதலும் தேவைப்படுகிறது. தொழில் தொடர்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் பயனடையும் யுத்தியை புதிய தொழில் துவங்குவோர் கற்றுக் கொள்ளவேண்டும். பிற தொழில் முனைவோர்கள், வாடிக்கையாளர்கள், வங்கியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், தொழில் சட்ட மற்றும் நிதி ஆலோசகர்கள் ஆகியோர்களுடன் தெடர்புகள் ஏற்படுத்துவதன் மூலம் தொழிலில் ஏற்படும் சவால்களுக்கும் பிரச்சனைகளுக்கும் உடனுக்குடன் ஆலோசனைகள் பெற்று சிறப்பான முறையில் தொழில் செய்யலாம்.

தொழில் முனைவோர்களிடையே தொடர்புகளை பலப்படுத்தவும் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை The Indus Entrepreneurs (TIE) என்ற தொண்டு நிறுவனத்துடன் இணைந்து தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் தொழில் முனைவோர்கள்

இணைப்புக் கூட்டத்தை நடத்தி வருகிறது. முதலாவது இணைப்புக் கூட்டம் 13.05.2016 அன்று தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்றது.

அடுத்த தொழில் முனைவோர் இணைப்புக் கூட்டம் வரும் ஜூன் மாதம் 10 ஆம் தேதி பாரத்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032 ல் அமைந்துள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவன வளாகத்தில் மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

NEEDS திட்ட தொழில் முனைவோர்கள் இக்கூட்டத்திற்கு வருகை தந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்தைப் பற்றி மேலும் தகவலுக்குத் தொழில் முனைவோர்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் துணை இயக்குநரை மின்னஞ்சல் : ddp@editn.in. அல்லது தொலைபேசி எண்கள் : 8754590961, 22252081 வாயிலாகத் தொடர்பு கொள்ளலாம். மேற்கண்ட இணைப்புக் கூட்டம் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் இணையதளமான www.editn.in மூலம் Webinar முறையிலும் ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பபட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**